பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 08 2024 6 30

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் துறையை மேம்படுத்தி விவசாயிகளுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. 2047-ஆம்ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க சுற்றுலாத்துறை முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய அமைச்சர் திர கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.
3. சென்னை கிண்டியில் 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட சிறுவர் இயற்கை பூங்காவை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.
4. காவிரி வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று இடம் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
5. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

வேளாண்மைத் துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து விவசாயிகளுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று 32-வது சர்வதேச வேளாண் விஞ்ஞானிகள் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார கொள்கையின் மையமாக வேளாண்மை உள்ளதாகத் தெரிவித்தார்.

உள்நாட்டு தேவைகள் மட்டுமன்றி உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தானிய வகைகள், பால், பருப்பு மற்றும் நறுமணப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ரசாயனம் இல்லாத இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடியை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட்டு வருவதாகவும், நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நீடித்த வேளாண் வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சிக்கு சுற்றுலாத்துறை முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

நொய்டாவில் இன்று நடைபெற்ற ஏழாவது இந்திய சர்வதேச விருந்தோம்பல் கண்காட்சியை தொடங்கி வைத்து பேசிய அவர், சுற்றுலாத் துறையையும், விருந்தோம்பலையும் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

சர்வதேச விருந்தோம்பல் கண்காட்சி கடந்த ஆறு ஆண்டுகளாக நடத்தப்பட்டு, இந்த துறைக்கு புத்துயிரூட்டப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்த அவர், இவற்றை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

சென்னை கிண்டியில் 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட சிறுவர் இயற்கை பூங்காவை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

வனம் மற்றும் வன விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வை குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் நோக்கில் கிண்டி பூங்கா மறுவடிவமைக்கப்பட்டு பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடக்கிய இயற்கை பூங்காவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை2024-யும் முதலமைச்சர் இன்று வெளியிட்டார்.

கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களின் எல்லையோர மாவட்டங்களை ஒருங்கிணைத்து இந்த யானைகள் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழகத்தில் தற்போது யானைகளின் எண்ணிக்கை மூவாயிரத்து 63-ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சாலைகளை தரமாக பராமரிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று சாலைப் பணிகளை ஆய்வு செய்த அமைச்சர், மழைக் காலங்களில் பொதுமக்கள் இடையூறு இல்லாமல் பயணம் மேற்கொள்ளும் வகையில் நெடுஞ்சாலைகளை பராமரிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

கிராமச்சாலைகள் மழைக் காலங்களில் அதிக பாதிப்புக்கு உள்ளதாகவும், இதனை முன்கூட்டியே கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

சாலைகளுக்கு அருகே உள்ள ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் ஆகியவற்றில் நீர் நிரம்பி வழியும்போது சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய பராமரிப்புப் பணிகளை செய்திட வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே மற்றும் உயர்மட்ட மேம்பாலங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் திரு ஏ வ வேலு மேம்பாலங்களின் தரத்தை உறுதி செய்திட வேண்டுமென்றும் திரு ஏ வ வேலு அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

மேட்டூர் அணையிலிருந்து அதிக அளவு தண்ணீர் வெளியேற்றப்படுவதால் காவிரி கரையோர மாவட்டங்களில் 50 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், வெள்ள நிலவரத்தைப் பொறுத்து காவிரி கரையோரப் பகுதிகளில் கூடுதலாக மருத்துவ முகாம்கள் அமைக்கப்படும் எனறு கூறியுள்ளார்.,

இந்த மருத்துவ முகாம்களல் சளி, காய்ச்சல், உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு பரிசோதனை செய்யப்பட்டு தேவைக்கேற்ப மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முகாம்களில் தேவையான மருந்துகள்கையிருப்பில் உள்ளதாகக் கூறியுள்ள அவர், விஷக்கடி, பாம்புகடி போன்ற பாதிப்புகளுக்கு அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

108 அவசர ஊர்தி வாகனங்களும் மாவட்டந்தோறும் தயார் நிலையில் உள்ளதாகவும் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

காவிரி வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று இடம் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

மேட்டூர் அணையிலிருந்து அதிக அளவு நீர் வெளியேற்றப்படுவதால் பாதிக்கப்பட்டுள்ள குமாரபாளையம், பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம், கொடுமுடி ஆகிய பகுதிகளை இன்று பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டுமென்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் கொலை சம்பவங்கள் தற்போது அதிகரித்திருப்பதாகக் கூறினார்.

காவல்துறையினர் சுதந்திரமாக செயல்பட்டு குற்றங்களை ஒடுக்கும் வகையில் மாநில அரசு அவர்களுக்கான அதிகாரங்களை உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஆடிப்பெருக்கு விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மக்கள் ஆறுகளில் புனித நீராடி, கரையோரப் பகுதிகளில் படையலிட்டு வழிபட்டனர், இந்த ஆண்டு காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் மக்கள் மகிழ்ச்சியோடு ஆடிப்பெருக்கை கொண்டாடியதாக எமது திருச்சி செய்தியாளர் கதிரவன் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி, செங்கல்கட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இம்மாதம் 24, 25 தேதிகளில் நடைபெறவுள்ளதை அடுத்து இன்று நடைபெற்ற கால்கோள் விழாவில் மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு கலந்து கொண்டார்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நவீன சலவையகம் மற்றும் ஆயத்த ஆடையக உற்பத்தி அலகு அமைப்பதற்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தருமபுரியில் உள்ள தன்னார்வ அமைப்பு ஏழு லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை ஆட்சியரிடம் வழங்கினர்.

[]<<<>>>[]

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி சிறப்புநிலை பேரூராட்சி மற்றும் பேட்டைக்காரனிருப்பு ஊரட்சி ஒன்றியப் பகுதிகளில் இன்று புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டன.

[]<<<>>>[]

திண்டுக்கல்லில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் கிராண்ட் லைன் ஊராட்சியில் பிளாஸ்டிக் பெயின்ட் மருந்து உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் காவல்துறை ஆணையர் திரு சங்கர் தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் பட்டாசு ஆலையின் ஊழியர்களை பயிற்சிக்கு அனுப்பாத 98 பட்டாசு ஆலைகளுக்கு அபராதம் விதித்து தொழில் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டிக்கான காலிறுதி ஆட்டங்களில் பங்கேற்கும் அணிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

நாளை நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டங்களில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மகளிர் 25 மீட்டர் துப்பாக்கிச்சுடும் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் மனு பாக்கர் நான்காவதாக வந்து பதக்கம் பெறும் வாய்ப்பை தவறவிட்டார்.

வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி காலிறுதியில் தோல்வியடைந்தார்.

***<u>End of News</u>***